

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அயப்பாக்கம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் 5.28 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் 7 MLT கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை புதுப்பிப்பு பணியை தமிழ்நாடு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை(பொ) அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ். முருகன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் கணபதி, நேற்று முன்தினம் (17.06.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர் செல்வி. அபூர்வா, வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ், தலைமை பொறியாளர் கண்ணன், மேற்பார்வை பொறியாளர் ராமகிருஷ்ணன், செயற்பொறியாளர் திருமதி. வெங்கடேஸ்வரி உள்ளிட்ட துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி 75வது வார்டு தலைமை செயலக குடியிருப்பு ஏ.கே.சாமிநகர் 1வது தெருவில் அமைந்துள்ள பழைய விளையாட்டு திடலில் புதுபொலிவுடன் இறகு பந்து கூடம், வாலிபால் மற்றும் கபடி இரவுண்ட் மற்றும் பெண்கள் உடற்பயிற்சி கூடம் அமைய உள்ள விளையாட்டு திடலின் புனரமைக்கும் பணியினை இந்து சமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளருமான பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ்குமார், ரமணி லோகேஷ் எம்.சி., டி.லோகேஷ், நா.துலுக்காணம், வீ.க.வெங்கடேசன், பி.சுகுமார், வனஜா சண்முகம், வீரமணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நிதிநுட்ப நகர அடிக்கல் நாட்டு விழாவில் முதல்வர் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

பெற்றுள்ளன. பாரம்பரியமாகச் செயல்பட்டு வரும் வங்கி மற்றும் வங்கி அல்லாத நிதிநிறுவனச் சேவைகள், வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கும் நிதிநுட்பத்துறையும் தமிழ்நாட்டில் மிகப்பெரிய வளர்ச்சி காணும் என நான் உறுதியாக நம்புகிறேன். நிதிநுட்பத்தொழில் சூழலமைப்பைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது என்பதற்கு இங்கு அமையப் பெற்றுள்ள நிறுவனங்களே சாட்சி.

### இளைஞர்களின் சக்தி இங்கு கொட்டிக் கிடக்கிறது!

படித்த திறன்மிகு இளைஞர்களின் சக்தி இங்கு கொட்டிக் கிடக்கிறது. பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது. இதனை நாம் தக்க வைத்துக் கொள்ளவேண்டும். அடுத்த கட்டத்திற்கும் எடுத்துச் செல்லவேண்டும். நாளை வரப்போகும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப, நமது இளைஞர்களின் திறன்களை வளர்த்து, முன்னேறுவதில் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். அதன் ஒரு பகுதியாகத்தான், 'நான் முதல்வன்' திட்டத்தை தொடங்கி இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறோம். நிதிநுட்பத்துறை முதலீடுகளை மதிநுட்பத்துடன் ஈர்க்க, நாங்கள் ஏராளமான முன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

### சிறப்புக் கொள்கை வெளியீடு!

2025ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை நிதிநுட்ப நிறுவனங்களின் உலகளாவிய மையமாக மாற்றக்கூடிய வகையில், 'தமிழ்நாடு நிதிநுட்பக் கொள்கை - 2021' என்ற சிறப்புக் கொள்கையை நான் வெளியிட்டிருக்கிறேன்.

**50 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு மேற்கொள்ளும் நிதிநுட்ப நிறுவனங்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.**

**தொழில்துறை வழிகாட்டி நிறுவனத்தில் தனியே ஒரு நிதிநுட்பப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.**

**தொழில்துறை அமைச்சர் தலைமையில் ஒரு நிதிநுட்ப ஆட்சி மன்றக்குழு அமைக்கப்பட்டுள்ளது.**

இந்த வரிசையில் சென்னையில் ஒரு நிதிநுட்ப நகரம் அமைத்திடுவதற்கும், நிதிநுட்பச் சேவைகளை ஒரே இடத்தில் வழங்கும் வகையிலும், ஒரு நிதிநுட்பக் கோபுரத்தை அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டி வைத்ததில், நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிதிநுட்ப நகரத்தில், இந்திய மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் நவீன உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்துத் தர இருக்கின்றோம். சென்னை மாநகரத்தின் மையப்பகுதியான நந்தம்பாக்கத்தில், 56 ஏக்கர் நிலத்தை, இதற்கென ஒதுக்கி இருக்கிறோம். இதன்மூலம், நிதிநுட்பத் துறையில் 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 80 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.

### நிதிச் சேவைகளின் மையமாக நிதி நுட்ப நகரம் செயல்படும்!

மேலும், இங்கு 5.6 இலட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு நிதிநுட்ப கோபுரம் (FinTech Tower) ஒன்றை அமைக்கவுள்ளோம். இதன்மூலம், ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலாக முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, ஏறக்குறைய 7 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

சுருங்கச்சொன்னால், அடுத்த தலைமுறைத் தொழில்நுட்பங்களான நிதிச்சேவைகள் மற்றும் அது தொடர்பான செயல்பாடுகள் அதனுடைய மையமாக இந்த நிதிநுட்ப நகரம் செயல்படும்.

இது வெறும் தொடக்கம்தான். நாங்கள் மேற்கொண்டுள்ள இந்தப் பயணத்தில், உங்கள் அனைவரின் ஈடுபாட்டையும் நான் வரவேற்கிறேன். உங்கள் நிதிநுட்பத் தீர்வுகள் மூலம், தமிழ்நாட்டினை புதிய உயரங்களுக்குக் கொண்டு செல்வதற்கு உங்கள் ஆதரவை இந்த நேரத்தில் நான் வேண்டுகிறேன்.

ஜனவரி மாதம் நடைபெற உள்ள, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் அதிக அளவில் பங்கேற்றுச் சிறப்பிக்குமாறும் உங்கள் துறைசார்ந்த தொழில்களில் அதிக முதலீடுகளை மேற்கொள்ளுமாறும் உங்களுக்கு இந்தத் தருணத்தில் அன்போடு அழைப்பு விடுக்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை வெகுவாக மிகச் சிறப்பாக நடத்திடக் காரணமாக இருந்த தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களுக்கும், தொழில்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் ச.கிருஷ்ணன் அவர்களுக்கும், தொழில்துறை அதிகாரிகளுக்கும், எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்துள்ள வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும், தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் உங்கள் அத்தனை பேருக்கும் நான் இந்தத் தருணத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

ரூ.370 கோடி மதிப்பில்

# சென்னை - நந்தம்பாக்கத்தில் நிதிநுட்ப நகரம் - நிதிநுட்ப கோபுரம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி - பணிகளைத் தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஜூன் 19-*

*நந்தம்பாக்கத்தில் ரூ.116 கோடி மதிப்பீட்டில் நிதிநுட்ப நகரம் (FinTech City) மற்றும் ரூ.254 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிதிநுட்ப கோபுரம் (FinTech Tower) கட்டும் பணிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.*

அதன் விபரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்றுமுன்தினம் (17.06.2023) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் சென்னை, நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் சென்னை, ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 56 ஏக்கர் நிலப் பரப்பில், நிதிநுட்ப நகரம் (FinTech City) அமைப்பதற்கும், அங்கு முதற்கட்டமாக 254 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.6 லட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில் சர்வதேச தரத்திலான நிதிநுட்ப கோபுரம் (FinTech Tower) என்ற அடுக்குமாடி கட்டடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டினார்.

### 80,000 நபருக்கு வேலை கிடைத்திடும்!

தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய அதிவேக வளர்ச்சியை கருத்தில் கொண்டு, கடந்த 2000 ஆம் ஆண்டு சென்னை ராஜீவ் காந்தி சாலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொலைநோக்குப் பார்வையோடு டைடல் பார்க் (TIDEL Park) அமைக்கப்பட்டது. இதன்மூலம் அந்த சாலை மட்டுமன்றி, அப்பகுதி முழுவதும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமையப்பெற்று, தற்போது தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் அடையாளமாக விளங்கி வருகின்றது.

அதேபோன்று, டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி உலகம் நகர்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில், நிதிநுட்ப துறை சார்ந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கி, நிதிநுட்ப துறையில் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்க வேண்டும் என்பது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உயரிய நோக்கமாகும்.

அதை நிறைவேற்றும் வகையில், 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட அறிக்கையில், நிதிநுட்பத் துறை வளர்ச்சிக்கு தமிழ்நாட்டில் மாபெரும் வாய்ப்புகள் உள்ளதால் அதனை முன்னெடுக்கும் வகையில் சென்னை நந்தம்பாக்கத்தில் நிதிநுட்ப நகரம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் சென்னை, ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 56 ஏக்கர் நிலப்பரப்பில் நிதிநுட்ப நகரம் அமைக்கப்படவுள்ளது. இந்த நிதிநுட்ப நகரம், நிதித்துறை சார்ந்த உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் கிளைகளை அமைப்பதற்கு ஏதுவாக சாலைகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் வடிகால் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

மேலும், அங்கு பணிபுரிபவர்களுக்கு அந்நகரத்திலேயே குடியிருப்பு வசதி ஏற்படுத்தப்படுவதுடன், வணிக வளாகங்கள், நட்சத்திர விடுதிகள், பூங்காக்கள் மற்றும் உணவகங்கள் போன்ற அனைத்து வசதிகளையும் கொண்டிருக்கும்.

இந்நகரம் அமைவதன் மூலம் 12,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்படுவதுடன், சுமார் 80,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திட வழிவகை ஏற்படும்.

### நிதிநுட்ப கோபுரம் (FinTech Tower)

நிதிநுட்ப நகர திட்டத்தின் ஒரு பகுதியாக 254 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 5.6 லட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில் சர்வதேச தரத்திலான ஒரு நிதிநுட்ப கோபுரம் என்ற அடுக்குமாடிக் கட்டடம் கட்டப்படவுள்ளது.

நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் உள்ள அலுவலகங்கள் இங்கு அமைக்கப்படும். இதில் 250 இருக்கைகள் மற்றும் 50 இருக்கைகள் கொண்ட கூட்ட அரங்கங்கள், குழந்தைகள் காப்பகம், உடற்பயிற்சிக் கூடம், உணவகங்கள் போன்றவை அமைக்கப்படும். இந்த நிதிநுட்ப கோபுரம் அமைவதன் மூலம், 1000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்படுவதுடன் சுமார் 7000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட வழிவகை ஏற்படும்.

இந்நிகழ்ச்சியில், நிதி, மின்சாரம் மற்றும் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், செயல் இயக்குநர் டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவாரூர் 'கலைஞர் கோட்டம்' திறப்பு விழாவில்

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

*புதுக்கோட்டை, ஜூன் 19-*



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாளை 20.6.2023 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு உலகத் தமிழினத்தின் உன்னதத் தலைவராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி திருவாரூர் மாவட்டம், காட்டூரில் திருமதி.தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழா கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், ஒன்றிய பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள். இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள். மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், அலங்காநத்தம் பிரிவில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 364 பயனாளிகளுக்கு ரூ. 8.53 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், ரூ.62.32 லட்சம் மதிப்பீட்டில் 3 புதிய திட்டப் பணிகளுக்கு நிர்வாக அனுமதியினையும் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா மற்றும் அனைத்து துறை அதிகாரிகள், பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சைதையில் நல உதவிகள் வழங்கல்!

*சென்னை, ஜூன் 19-*

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்குபகுதி, 142(அ) வட்ட திமுக சார்பில் மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் பொன்ஜெய்சிங் தலைமையிலும் சைதை மேற்குபகுதிகழக செயலாளரும், 10வது மண்டலக்குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்குபகுதி செயலாளரும், 13வது மண்டலக்குழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினரும், 140வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலையிலும் 142வது (அ) வட்ட கழகச்செயலாளர் எஸ்.பி.கோதண்டம், 142வது வட்ட கழகச்செயலாளர் எம்.நாகா, இலக்கிய அணி இணைச்செயலாளர் ஏ.எஸ்.பழனி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஏ.சந்தோஷ், பொறியாளர் அணி பகுதி அமைப்பாளர் ஆர்.எஸ்.ரமேஷ், பகுதி பிரதிநிதிகள் பாரதிபாஸ்கர், வே.பிரபு, முன்னாள் பகுதி பிரதிநிதிகள் எம்.சுந்தர், ஜி.உதயா, முன்னாள் வட்ட செயற்குழு உறுப்பினர் கழக எஸ்.ரமேஷ் ஆகியோர் வரவேற்பிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் தொடக்க விழாவினை முன்னிட்டு 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சைதாப்பேட்டை, சுப்பிரமணிய சாலையில் 17.06. 2023 (சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயனாளிகள் 1500 பேருக்கு நலதிட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஏழாஞ்சேரி கெ. வரதன்

## ஜூன் 19 (2003)



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்திலும் பின்னர், கழகம் துவங்கிய பின், கிளைச் செயலாளர், செய்யாறு வட்டச் செயலாளர், வெம்பாக்கம் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1977–ல் காஞ்சிபுரத்தில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவின் "நீதிதேவன் மயக்கம்" நாடகத்தில் நடித்தவர்.**

**ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகள் வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற 'இந்தி எதிர்ப்பு போராட்டத்தில்' காஞ்சிபுரம் அருகே உள்ள நத்தப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட்டு ஆறுமாத கடுங்காவல் தண்டனையை கடலூர் சிறையில் அனுபவித்ததோடு, நெருக்கடி கால மிசாவில் கைது செய்யயப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**